“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2019

## தமிழ்மொழி ஆண்டு 5

**நேரம்: 120 நிமிடம்** **சுட்டெண்:** ____________________

### பகுதி -1

**வினாத்தாளில் விடை எழுதுக.**

**1. பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.**

1. ஊடகங்களுள் காலத்தால் முந்தியது
(தொலைக்காட்சி, செய்தித்தாள், வானொலி)

2. குதிரை கனைக்கும் அதுபோல புலி
(பிளிறும், கத்தும், உறுமும்)

3. இறந்தகால இடைநிலைகள்
(கின்று கிறு, த் ட் ற் இன், ப் வ்)

4. அறுபதாவது ஆண்டின் நிறைவிற் கொண்டாடப்பெறுவது
(வெள்ளிவிழா, பொன்விழா, வைரவிழா)

5. தமிழிலுள்ள முதலெழுத்துகளின் எண்ணிக்கை
(முப்பது, பன்னிரண்டு, பதினெட்டு)

6. யாழ்ப்பாணத்தை முதலில் கைப்பற்றிய ஐரோப்பியர்
(ஒல்லாந்தர், போத்துக்கேயர், ஆங்கிலேயர்)

7. குழலி கலகல எனச் சிரித்தாள். இதில் கலகல என்பது
(இணைமொழி, அடுக்குமொழி, இரட்டைக்கிளவி)

8. ஓடுமீன் ஓட உறுமீன் வரும்வரை கொக்கு காத்து நின்றது. இதில் வந்துள்ள உரிச்சொல்
(ஓடு, உறு, காத்து)

9. அவன் படிக்கின்றான். அவர்கள்
(படிக்கின்றோம், படிக்கின்றீர்கள், படிக்கின்றார்கள்)

10. ஒற்றைக்குடை பிடிப்பார் ஒருவரையும் உள்ளே விடார். அவர்
(ஆமை, காளான், நண்டு)

11. குதிரையின் இளையது குட்டி போல பசுவின் இளையது
(பிள்ளை, குஞ்சு, கன்று)

12. பொருளின் பெயரை உணர்த்தி வருவது
(பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல்)

13. ‘வீர சுதந்திரம் வேண்டி நின்றார்...’ என்ற பாடலைப் பாடியவர்
(இளங்கோவடிகள், பாரதியார், பாரதிதாசன்)

14. உவமை உருபுகளில் ஒன்று
(அந்த, ஆகா, போல)

15. சேந்தன் தன் வாய்க்கொழுப்பினால் ஊராரிடம் அடிவாங்கினான்.
இதில் வாய்க்கொழுப்பு என்பது
(அகங்காரம், வாயிற்புண், ஆரவாரம்)

(15×1=15 புள்ளிகள்)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

1. உலகம் ______________________
2. கற்றல் ______________________
3. செவி ______________________
4. துன்பம் ______________________
5. பருவம் ______________________
6. மெய் ______________________

(6×1=6 புள்ளிகள்)

**3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.**

1. அன்பு ______________________
2. வெண்மை ______________________
3. அறம் ______________________
4. இயற்கை ______________________
5. சிறிது ______________________
6. அழுகை ______________________

(6×1=6 புள்ளிகள்)

**4. சேர்த்தெழுதுக.**

1. மணி + முடி = ________________________
2. செய்தி + தாள் = ________________________
3. வேனில் + காலம் = ________________________
4. இலாபம் + நட்டம் = ________________________
5. நல்ல + உறவு = ________________________
6. கருமை + இருள் = ________________________

(6×1=6 புள்ளிகள்)

**5. பிரித்தெழுதுக.**

1. காற்சலங்கை = ____________________ + ____________________
2. பொன்வண்டு = ____________________ + ____________________
3. உயிரினம் = ____________________ + ____________________
4. நூற்றாண்டு = ____________________ + ____________________
5. ஊட்டச்சத்து = ____________________ + ____________________
6. தமிழ்ப்பள்ளி = ____________________ + ____________________

(6×1=6 புள்ளிகள்)

**6. தரப்பட்ட சொற்களை வைத்து திருக்குறள்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| கூழ் | கருதி | மக்கள் |
| கலங்காது | சிறுகை | ஞாலங் |

1. அமிழ்தினு மாற்ற வினிதேதம் ____________________

____________________ யளாவிய ____________________.

2. காலங் ____________________ இருப்பர் ____________________

____________________ கருது பவர்.

(6×½=3 புள்ளிகள்)

**7. பொருத்தமான சொற்றொடர்களை வைத்து வாக்கியங்களை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| சடசட | நோய்நொடி | கண்ணை இமை காப்பது போல |
| அல்லும் பகலும் | தட்டிக்கொடுத்து | வாழைப்பழத்தில் ஊசி ஏறியது போல |

1. தாய் தன் குழந்தையை ______________________________ பாதுகாத்தாள்.
2. நாம் ________________________ இன்றி வாழ வேண்டும்.
3. அவன் ________________________ அயராது உழைத்தான்.
4. பெற்றோர் தம் பிள்ளைகளை ____________________________ வளர்க்க வேண்டும்.
5. புயற் காற்றினால் மரங்கள் ________________________ என முறிந்தன.
6. ஆசிரியர் கூறிய புத்திமதிகள் ________________________________ இருந்தன.

(6×1=6 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வர வாக்கியங்கள் எழுதுக.**

1. அடி

   பெயர்: ________________________________________________

   வினை: ________________________________________________

2. கடை

   பெயர்: ________________________________________________

   வினை: ________________________________________________

(4×1=4 புள்ளிகள்)

**9. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஈழத்தின் முக்கிய வணிகப் பொருட்கள் எவை? (1 புள்ளி)

2. ஒற்றுமையை விளக்கும் பழமொழி ஒன்று தருக. (1 புள்ளி)

3. அஃறிணைக்குரிய பால்கள் எத்தனை? அவற்றினை எழுதுக. (1 புள்ளி)

4. வாக்கிய உறுப்புகள் எவை? (1 புள்ளி)

5. சொற்புணர்ச்சி என்றால் என்ன? விகாரப்புணர்ச்சியின் வகைகளைத் தருக.?

(2 புள்ளிகள்)

**10. கீழ்வருவனவற்றுள் ஒன்றினைப்பற்றி 60 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. ஐரோப்பியர் வருகை
2. சாமுவேல் மோர்ஸ்
3. நீர் கண்டுகளித்த ஒருவிழா

(7 புள்ளிகள்)

## பகுதி – 2

**1. அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களில் பொருத்தமானதைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. வானத்தில் பறப்பது ______________________. (பறவை, பரவை)
2. ஆற்றின் ஓரம் ______________________. (கறை, கரை)
3. ______________________ நீர் நிறைந்தது. (ஏரியில், ஏறியில்)
4. வேண்டாத செடியைக் ______________________ என்போம். (கழை, களை)
5. சிறுதுளி பெரு ______________________. (வெல்லம், வெள்ளம்)
6. தேர்வு கடினமாக இருக்கும் என நினைத்தேன் ______________________ இலகுவாக இருந்தது. (ஆனால், அதனால்)

(6×1=6 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் வாக்கியங்களை உமக்குத் தெரிந்த பிறமொழியில் மொழிபெயர்த்து எழுதுக.**

1. இன்று எனது பிறந்தநாள்.

   ______________________________________________

2. அவன் நீந்தினான்.

   ______________________________________________

3. நான் காற்பந்து விளையாடினேன்.

   ______________________________________________

4. நண்பனுக்கு நன்றி கூறினேன்.

   ______________________________________________

5. குயிலி நடனம் ஆடினாள்.

   ______________________________________________

6. நான் தொலைக்காட்சி பார்த்தேன்.

   ______________________________________________

(6×½=3 புள்ளிகள்)

**3. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

சுத்தம் சுகம் தரும், கூழானாலும் குளித்துக்குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு என்பன பழமொழிகள். இவை உடலின் தூய்மையை வலியுறுத்துகின்ற பழமொழிகளாகும். பொய் பேசாதே; பொறாமைப் படாதே; பேராசை கொள்ளாதே; சினம் அடையாதே என்பன உள்ளத்தின் தூய்மையை வலியுறுத்தும் தொடர்களாகும். நோயற்ற வாழ்வுக்கு அடிப்படையாக அமைவது உடல் தூய்மையாகும். உடல் தூய்மை உள்ளம் தூய்மையடைவதற்கு வழிகோலும். உடல் தூய்மையும் உள்ளத் தூய்மையும் தனிமனித வாழ்க்கைக்கு நன்மை பயக்கும். ஆனால் சுற்றுப்புறத் தூய்மையோ சமுதாயம் முழுவதற்கும் நன்மை விளைவிக்கும். வீட்டில் வாழும் மக்களுக்கு அயல்வீடு, வீதி, பாடசாலை, அலுவலகம், பூங்கா, விளையாட்டிடம் போன்றவை அனைத்தும் சுற்றுப்புறங்களாகும். எமது சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதே சுற்றுப்புறத் தூய்மையாகும்.

1. உடல் தூய்மை எதற்கு வழிகோலும்?

   ______________________________

2. சுற்றுப் புறத்தூய்மை என்றால் என்ன?

   ______________________________

3. எமது சுற்றுப்புறங்களாக அமைபவை எவை?

   ______________________________

4. உடலின் தூய்மையை வலியுறுத்தும் பழமொழிகள் இரண்டு தருக.

   ______________________________

   ______________________________

5. தனிமனித வாழ்க்கைக்கு நன்மை பயப்பவை எவை?

   ______________________________

6. உள்ளத் தூய்மையை வலியுறுத்துகின்ற தொடர் இரண்டு தருக.

   ______________________________

(6×1=6 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | 8 | | |